# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண்.29

## 2017–2018 ஆம் ஆண்டுக்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | சுற்றுலா – முன்னுரை | 1 |
| 2. | இந்தியாவில் சுற்றுலா | 4 |
| 3. | தமிழ்நாட்டில் சுற்றுலா | 5 |
| | ➢ சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள் | 5 |
| | ➢ உத்திகள் | 6 |
| 4. | தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை | 7 |
| 5. | சுற்றுலாத் தொழில் | 9 |
| 6. | கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் | 10 |
| 7. | உள்நாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல் | 14 |
| | ➢ 32–வது இந்திய சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்களின் வருடாந்திர மாநாடு, சென்னை | 15 |
| 8. | பன்னாட்டுச் சந்தை மற்றும் விளம்பர முகாம்கள் | 16 |
| | ➢ ஜப்பான் சுற்றுலா பயண முகவர்கள் சங்க சந்தை (ஜட்டா) | 17 |
| | ➢ பன்னாட்டு சுற்றுலாச் சந்தை (ஐடிபி) ஆசியா, சிங்கப்பூர் | 18 |

| | | |
|---|---|---|
| | ➢ உலக சுற்றுலாச் சந்தை, லண்டன் | 18 |
| | ➢ ஃபிட்டூர் பன்னாட்டு சுற்றுலா தொழில் கண்காட்சி, மாட்ரிட்– ஸ்பெயின் | 19 |
| | ➢ உலக சுற்றுலாச் சந்தை, பெர்லின் | 19 |
| 9. | உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள் | 20 |
| 10. | வழிகாட்டிப் பயிற்சி | 20 |
| 11. | மனித வள மேம்பாடு | 21 |
| 12. | விளம்பரம் –காட்சிப்படுத்துதல் | 22 |
| 13. | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி | 24 |
| 14. | சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு | 25 |
| 15. | சுற்றுலா உள்கட்டமைப்பு | 26 |
| | (i) மாநில அரசு நிதியுதவித் திட்டங்கள் | 26 |
| | (ii) இந்திய அரசு நிதியுதவித் திட்டங்கள் | 30 |
| 16. | ஆசிய வளர்ச்சி வங்கி – IDIPT திட்டம் (தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம்) | 32 |
| 17. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 33 |
| | ➢ ஓட்டல்கள் பிரிவு | 33 |
| | ➢ படகு குழாம்கள் | 34 |
| | • படகு குழாம் – முட்டுக்காடு | 34 |

| | | |
|---|---|---|
| | • படகு குழாம் – முதலியார்குப்பம் | 35 |
| | • படகு குழாம் – ஊட்டி | 36 |
| | • படகு குழாம் – பைகாரா | 36 |
| | • படகு குழாம் – கொடைக்கானல் | 37 |
| | • படகு குழாம் – ஏற்காடு | 37 |
| | • படகு குழாம் – பிச்சாவரம் | 38 |
| | • படகு குழாம் – குற்றாலம் | 38 |
| | ➢ போக்குவரத்து பிரிவு | 39 |
| | ➢ பொருட்காட்சி பிரிவு | 40 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் (விற்பனை) முயற்சிகள் | 41 |
| | ➢ விடுமுறைக் கால முன்வைப்புத் தொகை திட்டம் | 42 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்–ஆளுமை முயற்சிகள் | 44 |
| | ➢ 2016–2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட வளர்ச்சி மற்றும் கட்டுமானப் பணிகள் | 46 |
| 18. | முடிவுரை | 47 |
| 19. | சுற்றுலாத்துறை அமைப்பு விளக்கப்படம் அட்டவணை–1 | 48 |
| 20. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அட்டவணை–2 | 49 |

| | | |
|---|---|---|
| 21. | சுற்றுலா அலுவலகங்கள்<br>அட்டவணை—3 | 50 |
| 22. | சுற்றுலா தகவல் மையங்கள்<br>அட்டவணை—4 | 52 |

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# மானியக் கோரிக்கை எண். 29

# சுற்றுலா

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2017–2018

## முன்னுரை

சுற்றுலா செல்வது உலக அளவில் புகழ் பெற்ற பொழுதுபோக்காக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி நவீன சமுதாய மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியுள்ளது. பரபரப்பான மற்றும் போட்டிகள் நிறைந்த சூழலில் வாழ்வதால் ஓய்வு எடுப்பதற்கும், புத்துணர்ச்சி பெறுவதற்கும் சுற்றுலா செல்வது அவசியமாகிறது. மனித நேயத்தை வளர்க்கவும் பல்வேறு நாகரிகங்களுக்கு இடையிலான பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் சுற்றுலா மாபெரும் பங்களிப்பைச் செய்து வருகிறது. அறியப்படாத இடங்களை கண்டறியும் ஆர்வத்தோடு நமது முன்னோர்கள் மேற்கொண்ட பயணங்களின் விளைவாக அந்தந்த பகுதிகளின் பயிர்கள், தொழில்நுட்பம், உணவு வகைகள், புதிய சிந்தனைகள் முதலியவை பரிமாற்றம் அடைந்தன. இன்றும் சுற்றுலாவின்

மூலம், பிற இடங்களிலிருந்து பெறப்படும் சிறந்த பழக்கவழக்கங்களை அறிந்து கொள்வது வாழ்க்கை முறைகளை மாற்றியுள்ளது.

சுற்றுலா வளர்ச்சி அதிகளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதால் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் ஈட்டப்படும் வருவாய், அந்நிய செலாவணி, மண்டலவாரியான வளர்ச்சி முதலிய பொருளாதார மேம்பாடுகளுக்கு சுற்றுலா உதவுவதால் ஒட்டுமொத்த கூட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டையும், பன்னாட்டு நட்புறவையும் சுற்றுலா மேம்படுத்துகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் உருவாக்கப்பட்டன. நிர்வாக கட்டமைப்பு விவரம் இணைப்பு–I மற்றும் IIல் அளிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா குறித்த தகவல்களை அளித்தல், சுற்றுலா உள்கட்டமைப்பு திட்டங்களை சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக செயற்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கவனம் செலுத்துகிறது. பல்வேறு சுற்றுலாக்களை நடத்துதல்,

தங்கும் விடுதிகளை நடத்துதல், படகு இல்லங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழில் சிறப்பான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

சுற்றுலா என்பது உள்நாடு அல்லது வெளிநாட்டில் உள்ள மற்றொரு இடத்திற்கான பயணம் என பொதுவாக குறிப்பிடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பானது (UNWTO), சுற்றுலாப் பயணிகளை "ஓய்வு, வணிகம் மற்றும் இதர காரணங்களுக்காக ஓராண்டிற்கு மிகாமல், தங்களது வழக்கமான சூழலிலிருந்து மாறுபட்ட இடங்களுக்கு பயணித்து தங்குதல்'' என வரையறுத்துள்ளது.

சுற்றுலா நேரடி வேலைவாய்ப்பினை உருவாக்குவதோடு, அதன் மறைமுக விளைவின் மூலம் உள்ளூர் மக்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

மைய மற்றும் மாநில அரசுகளால் சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்க அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது. உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும், சுற்றுலாத்தலங்களை

சந்தைப்படுத்துவதற்கும் புதிய ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

## இந்தியாவில் சுற்றுலா

சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த படைப்புகள் இந்தியாவில் அமைந்துள்ளது. பனி படர்ந்த மலைகள், உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால், கலைநயமிக்க தமிழக கோயில்கள், நீண்ட கடற்கரை, அரண்மனைகள், புனிதத் தலங்கள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், இயற்கை வளங்கள், கிராமிய வாழ்க்கை முறை, பன்முக பண்பாடு, கலை, கைவினைப் பொருட்கள், கட்டிடக் கலை மற்றும் உணவு வகைகள் போன்றவைகளை இந்தியா தன்னகத்தே கொண்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கி, முனைப்பான மேம்பாட்டு முயற்சிகளை மைய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. சுற்றுலாத் தலங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

## தமிழ்நாட்டில் சுற்றுலா

### சுற்றுலாத்துறையின் குறிக்கோள்கள்

(அ) பன்னாட்டு அளவில் கவரக்கூடிய ஒரு சுற்றுலா இடமாக தமிழ்நாட்டினை பிரபலப்படுத்துதல்.

(ஆ) தொன்றுதொட்டு விளங்கும் பண்பாடு, பாரம்பரிய நினைவுச் சின்னங்களிலுள்ள கட்டிடக்கலையின் சிறப்புகளை காட்சிப்படுத்துதல்.

(இ) மாநிலத்தில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்தி வலுப்படுத்துதல்.

(ஈ) இதுவரை கண்டறியப்படாத சுற்றுலா வளங்களை வெளிக்கொணர்ந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.

(உ) சுற்றுலா உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்.

(ஊ) மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.

(எ) நாட்டின் அந்நியச் செலாவணியினை பெருக்குதல்.

(ஏ) சுற்றுலா தொழில்துறையில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதன் மூலம் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

## உத்திகள்

(அ) வளம் நிறைந்த சுற்றுலா சுற்றுக்களில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பினை முன்னுரிமை அளித்து மேம்பாடு செய்தல்.

(ஆ) அதிக அளவில் இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறப்பான சுற்றுலா வசதிகள் மற்றும் சேவைகள் அளித்தல்.

(இ) பல முகமைகளுடன் இணக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.

(ஈ) ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தை உள்ளடக்கிய சுற்றுலாவை ஊக்குவித்தல்.

(உ) தனியார் துறையினரை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் சமூகத்தினை சுற்றுலாவில் ஈடுபடுத்துதல்.

(ஊ) வேலை வாய்ப்பினை உருவாக்குதல், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் மறுவுருவாக்கம், மகளிர் மற்றும் நலிந்தோர் முன்னேற்றம் ஆகியவற்றின் மூலமாக சுற்றுலாவை நிலைப்படுத்தி நீடித்த வளர்ச்சி மற்றும் திறன் வளர்ப்பு மூலமாக மனித வள மேம்பாட்டினை உறுதி செய்தல்.

(எ) தேசிய மற்றும் பன்னாட்டு சுற்றுலா சந்தைகள், விளம்பர முகாம்கள், கண்காட்சிகள் ஆகியவற்றில் பங்கேற்றல்.

(ஏ) கடற்கரை சுற்றுலாவை மேம்படுத்துதல்.

(ஐ) சுற்றுச்சூழல் மற்றும் வனஉயிரினங்களை பாதிக்காத வகையில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவித்தல்.


## தமிழ்நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருகை

தமிழ்நாட்டுக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல், இத்தாலி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து, ஸ்பெயின், ஸ்காண்டிநேவிய நாடுகள், ரஷ்யா,

சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர்.

**தமிழ்நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருகை:—**

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை | வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை | மொத்தம் |
|---|---|---|---|
| | ( இலட்சத்தில்) | | |
| 2014 | 3275.55 | 46.58 | 3322.13 |
| 2015 | 3334.59 | 46.85 | 3381.44 |
| 2016 | 3438.10 | 47.20 | 3485.30 |



**2014** மற்றும் **2015** ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே முதலிடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. **2016**ஆம் ஆண்டு புதுமையான சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் பெருமளவில் செயல்படுத்துவதில் கையாளப்பட்ட உத்திகளின் விளைவாக உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்து, மூன்றாவது முறையாக மீண்டும் முதலிடத்தை தக்க வைத்துள்ளது.

**சுற்றுலாத் தொழில்**

இந்தியாவில் உள்ள யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்களில் ஐந்தினை தமிழ்நாடு தன்னகத்தே அதிக அளவில் கொண்டுள்ளது என்பது பெருமையாகும். இம்மாநிலம், துறைமுகங்களாலும், சிறந்த சாலை வசதிகளாலும் மற்றும் பல மாநிலங்களுக்கு செல்லத்தக்க வகையில் இரயில் போக்குவரத்து மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதை தவிர, மேலும் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் மூலம் பல நாடுகளுடன் நேரடி தொடர்பு வசதியை கொண்டுள்ளது. இம்மாநில மக்கள் அமைதியை நாடுபவர்களாக இருப்பதாலும் மற்றும் சட்டம்,

ஒழுங்கு சீராக இருப்பதாலும், இம்மாநிலத்தில் வணிக முயற்சிகளை மேற்கொள்ள தேவைப்படும் ஒருங்கிணைப்பு கொண்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் நிறைந்திருப்பதால், முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழ்நிலை உள்ளது எனலாம்.

## கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்

தமிழ்நாட்டிற்கு என உயரிய பாரம்பரியம் மற்றும் பண்பாடு உள்ளதால் இங்கு சுற்றுலாப்பயணிகள் அதிக அளவில் ஈர்க்கப்படுகின்றனர்.

மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் முதல் ஜனவரி வரை ஒரு மாத காலம் நடத்தப்படுகிறது. இவ்விழா இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் முன்னணி பாரம்பரிய மற்றும் நாட்டுப்புறக்கலை வடிவங்கள் ஒரே மேடையில் தோன்றும் விதமாக நடத்தப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் இவ்விழா ‘மாமல்லபுரம் நாட்டிய விழா’ என அழைக்கப்பட்டது. இந்த நாட்டிய விழா இந்தியாவின் பல்வேறு கலை வடிவங்கள் சேர்க்கப்பட்ட

பின்னர், “இந்திய நாட்டிய விழா” என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, புதுச்சேரி, ஜார்கண்ட், நாகலாந்து, மணிப்பூர், ராஜஸ்தான், ஒடிசா, மிசோரம், சிக்கிம், அசாம், மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து புகழ்பெற்ற கலைஞர்களால் பல்வேறு நடன நிகழ்ச்சிகள், யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய தலமான மாமல்லபுரத்தில் நடத்தப்படுகின்றன. மேலும், தென்னக பண்பாட்டு மையம், கலை பண்பாட்டுத் துறை மற்றும் அரசு இசைக் கல்லூரி, சென்னை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இங்கு நடத்தப்படும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் கூடுதல் பொலிவூட்டுகிறது. இவ்விழா வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவர்வது மட்டுமல்லாமல் நீண்ட காலம் தங்குவதற்கும் ஊக்குவிக்கிறது. இதை போன்றே, சென்னை, சிதம்பரம், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடத்தப்படும் இசை மற்றும் நாட்டிய விழாக்கள் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன.

முக்கிய மலைவாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கொல்லிமலை,

கல்வராயன்மலை, ஜவ்வாது மலை மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் கோடை விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், கலாச்சார பாரம்பரியத்தை எடுத்தியம்பும் வகையிலும் பின்வரும் சுற்றுலா விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

- பொங்கல் சுற்றுலா விழா – ஜனவரி
- வெப்பக் காற்று பலூன் விழா, பொள்ளாச்சி – ஜனவரி
- படகு மற்றும் நீர் சறுக்கு திருவிழா, மணப்பாடு – ஜனவரி
- சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார் – ஏப்ரல் / மே
- சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் – மே
- மாங்கனி விழா, கிருஷ்ணகிரி – மே
- மலைவாசஸ்தலங்களில் கோடைவிழா – மே

- கோடை கொண்டாட்டம், தூத்துக்குடி – மே
- சாரல் திருவிழா, குற்றாலம் – ஜூலை / ஆகஸ்டு
- ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் – ஜூலை / ஆகஸ்டு
- வல்வில் ஓரி விழா, கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் – ஜூலை / ஆகஸ்டு
- திருமூர்த்தி மலை, ஆடி பெருந் திருவிழா – ஆகஸ்ட்
- உலக சுற்றுலா தினம் – செப்டம்பர்
- சதய விழா, தஞ்சாவூர் – செப்டம்பர் / அக்டோபர்
- திருவண்ணாமலை தீபத் திருவிழா – நவம்பர் / டிசம்பர்
- தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் – நவம்பர் / டிசம்பர்
- வைகுண்ட ஏகாதசி திருவிழா, ஸ்ரீரங்கம் – டிசம்பர் / ஜனவரி
- இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம் – டிசம்பர் / ஜனவரி

தமிழ்நாட்டின் சுற்றுலா தலங்களை முக்கியப்படுத்தவும் அதிகம் பிரபலமடையாத சுற்றுலா தலங்கள் குறித்து காட்சிப்படுத்தவும் மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், கன்னியாகுமரி மற்றும் வேலூரில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகள் அனைத்திலும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டுள்ளது.

## உள்நாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்

தமிழ்நாட்டை உலகத்தரமான சுற்றுலாத் தலமாக வலுப்படுத்தும் நோக்கத்துடன், உள்நாட்டு சுற்றுலா மற்றும் வாங்குவோர் – விற்போர் சந்திப்பில் கவனம் செலுத்தி, வெளிநாட்டை சேர்ந்த வாங்குவோரும், உள்நாட்டை சேர்ந்த விற்பனையாளரும் நேரடி தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தவும், கொள்கை வகுப்போர், முதலீட்டாளர்கள், ஊடகங்களை சார்ந்தோரிடையே தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை காட்சிப்படுத்தவும், பிற மாநிலங்களாலும், புகழ்பெற்ற நிறுவனங்களாலும் நடத்தப்படும் சுற்றுலா சந்தைகள் மற்றும் சுற்றுலா பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்று வருகிறது.

## 32வது இந்திய சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்களின் வருடாந்திர மாநாடு, சென்னை

**32**வது இந்திய சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்களின் வருடாந்திர மாநாடு சென்னை, **2016** செப்டம்பரில் நடைபெற்றது. இம்மாநாடு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து பங்கு கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கு சிறந்த தளமாக அமையும் என கருதப்பட்டு அதன்படி இந்த மாநாட்டிற்கு "அதிகாரபூர்வ ஏற்பாட்டாளர் மாநிலம்" ஆக தமிழ்நாடு செயல்பட்டு ரூ.**75** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

## தமிழக சுற்றுலாத்துறை 2016–17ல் பின்வரும் உள்நாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றுள்ளது

- ✓ கிரேட் இந்தியன் பயண சந்தை, ஜெய்பூர், இராஜஸ்தான்
- ✓ உலக சுற்றுலா தொழில் பொருட்காட்சி, புதுதில்லி
- ✓ வைப்ரண்ட் பன்னாட்டு பயண சந்தை, குஜராத்
- ✓ பன்னாட்டு பயண சந்தை, சென்னை
- ✓ இந்திய பாரம்பரிய உணவக சங்கத்தின் **5**வது வருடாந்திர மாநாடு, உதய்பூர், இராஜஸ்தான்

- ✓ தெற்கு ஆசிய பயண மற்றும் சுற்றுலா பொருட்காட்சி (சாத்தே), புதுதில்லி
- ✓ திரைப்பட சுற்றுலா கருத்தரங்கு, கோவா
- ✓ 43வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி, சென்னை
- ✓ சுதந்திர தின கொண்டாட்டங்கள்
- ✓ இந்திய முதலீட்டாளர்கள் மாநாடு, புதுதில்லி
- ✓ குடியரசு தின கொண்டாட்டங்கள், புதுதில்லி
- ✓ இந்திய சுற்றுலா சந்தை, பெங்களூரு

## பன்னாட்டுச் சந்தை மற்றும் விளம்பர முகாம்கள்

தமிழக சுற்றுலா வளங்களை பிரபலப்படுத்த, பன்னாட்டுச் சுற்றுலாச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்கிறது. இச்சுற்றுலாச் சந்தைகளில் சுற்றுலா பயண முகவர்களும் தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். இச்செயல் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க உதவுகின்றது. தமிழக சுற்றுலாத்துறை கீழ்க்காணும் முக்கிய பன்னாட்டு பயணச்சந்தை மற்றும் விளம்பர முகாம்களில் கலந்து கொண்டது.

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 2016 | – | ஜட்டா சுற்றுலா பயணச் சந்தை, டோக்கியோ – ஜப்பான் |
| அக்டோபர் 2016 | – | பன்னாட்டு சுற்றுலாச் சந்தை, ஆசியா – சிங்கப்பூர் |
| நவம்பர் 2016 | – | உலக சுற்றுலாச் சந்தை – லண்டன் |
| ஜனவரி 2017 | – | ஃபிட்டூர் பன்னாட்டு சுற்றுலா தொழில் கண்காட்சி, மாட்ரிட் – ஸ்பெயின் |
| மார்ச் 2017 | – | உலக சுற்றுலாச் சந்தை, பெர்லின் |

மேற்கண்ட பன்னாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்ற பின்னர் பிரான்ஸில் உள்ள பாரிஸ், நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம், சுவிட்ஸர்லாந்தில் உள்ள பார்ன் மற்றும் இத்தாலியில் உள்ள மிலன் ஆகிய நகரங்களில் தமிழ்நாடு சுற்றுலா விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன.

**ஜப்பான் சுற்றுலா பயண முகவர்கள் சங்க சந்தை (ஜட்டா)**

செப்டம்பர் 2016ல் ஜப்பான், டோக்கியோ நகரில் நடைபெற்ற சுற்றுலா பயண முகவர்கள் சங்க சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டது. இது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

**பன்னாட்டு சுற்றுலா சந்தை (ஐடிபி) ஆசியா, சிங்கப்பூர்**

அக்டோபர் 2016ல் சிங்கப்பூர் மெரினா பே சாண்ட்ஸில் நடைபெற்ற சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை முதன்முறையாக பங்கேற்றது. இந்த சுற்றுலா சந்தையில், சிங்கப்பூர் மற்றும் மலேசிய வாழ் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஆன்மீகத்துடன் தொடர்பு கொண்டுள்ள சுற்றுலாத் தலங்களை பற்றிய விளக்கங்களை அளித்தது. சுற்றுலா முகவர்கள் பலரும் இச்சந்தையில் பங்கேற்றனர்.

**உலக சுற்றுலா சந்தை, லண்டன்**

2016 ஆம் ஆண்டு நவம்பரில், லண்டனில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா முகவர்கள் பங்கேற்றனர். இச்சந்தையில் சுமார் 200க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன. அச்சமயம் தமிழ்நாடு சுற்றுலா வளம் பற்றி காட்சிப்படுத்தப்பட்டது. இதன் பலனாக இங்கிலாந்து நாட்டிலிருந்தும் அதனருகே உள்ள நாடுகளிலிருந்தும் கணிசமான அளவில் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தனர்.

**ஃபிட்டூர் பன்னாட்டு சுற்றுலா தொழில் கண்காட்சி, மாட்ரிட் – ஸ்பெயின்**

**2017** ஆம் ஆண்டு ஜனவரியில் ஸ்பெயின் நாட்டில் உள்ள மாட்ரிட்டில் நடைபெற்ற ஃபிட்டூர் பன்னாட்டு சுற்றுலா தொழில் கண்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை, சுற்றுலா முகவர்களுடன் பங்கேற்றது.

**உலக சுற்றுலா சந்தை – பெர்லின்**

**2017** ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்துகொண்டது. வருகை புரிந்த பார்வையாளர்கள் மத்தியில் தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாப் பிரிவுகள் காட்சிப்படுத்தப்பட்டன. உலகளாவிய சுற்றுலா முகவர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடல் மூலம் நல்ல பலன் கிட்டியது. அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் குழுவாக அவர்கள் நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு அனுப்புவதற்கு முகவர்கள் ஆர்வம் காட்டினார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்பு, முதன்முறையாக, இத்தாலி - மிலன் நகரில் உள்ள இந்திய சுற்றுலா அலுவலகத்துடன் இணைந்து விளம்பர முகாம் மிலனில் நடத்தப்பட்டது.

## உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள்

தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுலாத் தலங்களிலும் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு உருவாக்கும் நோக்குடன், ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 27ம் தேதி உலக சுற்றுலா தினம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மேலும், முக்கிய சுற்றுலா தலங்களில் 'தூய்மை பேணும் முகாம்கள்', 'சுற்றுலா விழிப்புணர்வு முகாம்கள்' மற்றும் 'சுற்றுலா கருத்தரங்கங்கள்' ஆகியன தமிழக சுற்றுலாத் துறையால் நடத்தப்படுகின்றன.

## வழிகாட்டிப் பயிற்சி

தமிழகத்தின் கோவில்களை வழிபடவும், அங்குள்ள சிற்பங்களை ரசிக்கவும், பாரம்பரிய நினைவுச் சின்னங்கள், கோட்டைகள், அழகிய கடற்கரைகள், வனவிலங்கு சரணாலயங்கள், அருவிகள் மற்றும் மலை வாசஸ்தலங்களை கண்டு மகிழவும் ஆண்டு முழுவதும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிகின்றனர்.

சுற்றுலா மேம்பாட்டில் வழிகாட்டிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நாட்டின் பெருமைகளை விளக்குதல், சரியான சுற்றுலாத் தகவல்களை அளித்தல், சுற்றுலாப் பயணிகளின்

நலன்களை பாதுகாத்து சுற்றுலாத் தலங்களில் மனநிறைவோடு தங்கி செல்ல ஏற்பாடு செய்தல் முதலியன சுற்றுலா வழிகாட்டியின் முக்கிய பங்காகும். 133 சுற்றுலா வழிகாட்டிகளுக்கு அடையாள அட்டை இரண்டு ஆண்டுகளுக்கு புதுப்பித்து மார்ச் மற்றும் மே 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

## மனிதவள மேம்பாடு

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் மூலம் 38 சுற்றுலா அலுவலகங்களும், 20 சுற்றுலா தகவல் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில், 6 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 5 சுற்றுலா தகவல் மையங்கள் வெளி மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றன. இவ்வலுவலகங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான தகவல்கள் அளித்தல் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் விவரம் அட்டவணை 3 மற்றும் 4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## விளம்பரம் – காட்சிப்படுத்துதல்

தமிழ்நாட்டில் உள்ள ஆண்டு முழுவதும் செல்லத்தக்க சுற்றுலாத் தலங்கள் மற்றும் பன்முக சுற்றுலா வளங்கள் முதலியவற்றை விரிவான அளவில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்றாற்போல், தமிழ்நாடு சுற்றுலாத்துறை உள்நாடு மற்றும் பன்னாட்டு விமானங்களில் வழங்கப்படும் இதழ்கள் மற்றும் சுற்றுலாக் குறித்த சிறந்த இதழ்களிலும் விளம்பரம் செய்கிறது.

உலகம் முழுவதும் பிரபலமான சுற்றுலா இதழ்களிலும் மற்றும் பன்னாட்டு விமான சேவைகளில் ஈடுபடும் விமானங்களில் பயணிப்போர் படிக்கும் விமான இதழ்களான காண்டி நாஸ்ட் டிராவலர், டூரிஸ்டிக் ஆக்சுவல், ஹைலைஃப் (பிரிட்டிஷ் ஏர்வேஸ்), சில்வர் கிரிஸ் (சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்), கோயிங் பிலேசஸ் (மலேசியன் ஏர்லைன்ஸ்), ஹாலண்ட் ஹெரால்ட் (கேஎல்எம் ஏர்வேஸ்), ஜெட் விங்ஸ் இண்டர்நேஷனல் (ஜெட் ஏர்வேஸ்), சண்டே டைம்ஸ் டிராவலர், கல்ஃப் ஏர், டிராவல் + லெசர் (இந்தியா மற்றும் தெற்கு ஆசியா), டிராவல் + லெசர் (தென் கிழக்கு ஆசியா), நேஷனல்

ஜியாகிரபிக் டிராவலர் (இங்கிலாந்து) ஆகிய இதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது.

உள்நாட்டு விமான இதழ்களான ஜெட் விங்ஸ் (ஜெட் ஏர்வேஸ்), சுப யாத்ரா (ஏர் இந்தியா), ஏர்போர்ட்ஸ் இந்தியா மற்றும் அவுட்லுக், அவுட்லுக் (இந்தி), அவுட்லுக் டிராவலர், பெமினா (இந்தி), டிராவல் ஹைட்ஸ், சுவர் சரிதா, கிரிஹ சோபா, தி டெசர்ட் டிரயல், வோர்ல்ட் ஆப் டிராவல் அண்ட் டூரிசம், தி வீக், பெமினா, லோன்லி பிளானட், ஆசியன் டிராவலர், நேஷனல் ஜியாகிரபிக் டிராவலர் (இந்தியா), பிசினஸ் டிராவலர், ஃபுட் அண்ட் ஹெல்த் போன்ற இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

'டிஸ்கவர் தமிழ்நாடு' என்ற புத்தகம் ஆங்கில மொழியில் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் இந்தி மொழி மற்றும் அந்நிய மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மனி, ஸ்பானிஷ் மற்றும் சீன மொழிகளில், தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது.

புதுமையான முயற்சியாக 'தமிழ்நாடு சுற்றுலா பாஸ்போர்ட்' என்ற புத்தகம் வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் விநியோகிக்கப்பட்டது. இது மிகுந்த பாராட்டைப் பெற்றது.

தமிழ்நாடு சுற்றுலா சிறப்பிடங்கள் குறித்த சுற்றுலா குறும்படங்கள் தகவல் பதிவியில் (Pen Drive) வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளுக்கும், சுற்றுலா தொழில் சார்ந்தோருக்கும் விநியோகிக்கப்பட்டது.

## மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம் தொடர்பாக மூன்றாண்டு பட்டப் படிப்பும், உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் செய்தல் ஆகியவற்றில் ஒன்றரை

ஆண்டு பட்டயப் படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசு உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. உத்தரப் பிரதேசம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலுக்கான தேசிய கவுன்சிலின் அங்கீகாரம் பெற்று பல்வேறு பாடத்திட்டங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு**

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் சென்னையில் ஒரு முதன்மை சுற்றுலா பாதுகாவலரும், அவரின் கீழ் ஐந்து சுற்றுலா மையங்களான மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் தலா ஒரு நிலைய சுற்றுலா பாதுகாவலரும், கூடுதலாக, ஒவ்வொரு இடங்களிலும் ஐந்து சுற்றுலா பாதுகாவலர்களும் ஆக மொத்தம் 31 நபர்கள் இந்த அமைப்பில் உள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் புதிய இடங்களில் எதிர் கொள்ளும் இடர்பாடுகளை களைதல், இடர்பாடற்ற பயணம், தகவல் பரிமாற்றம், இடைத்தரகர்களை தவிர்த்தல் முதலியன இந்த அமைப்பின் நோக்கங்களாகும். சுற்றுலா பாதுகாப்பு அமைப்பில் பணிபுரிய முன்னாள் இராணுவத்தினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தமிழ்நாடு காவலர் உயர் பயிற்சியகம் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு, சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் காவல்துறை ஆகியோர்களிடையே இணக்கமான சூழலை ஏற்படுத்துகிறது. இந்த சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களின் பாராட்டினை பெற்றுள்ளது.

## சுற்றுலா உள்கட்டமைப்பு

### (I) மாநில அரசு நிதியுதவித் திட்டங்கள்

தமிழகத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில், தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கிய பணிகளான

ஓய்வுக்கூடங்கள், கழிப்பறைகள், அணுகு சாலைகள், உடை மாற்றும் அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, வழிகாட்டி பலகைகள் நிறுவுதல் போன்ற அடிப்படை கட்டமைப்பு பணிகள் சுற்றுலா தலங்களில் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டத்திற்காக 2011 முதல் 2016 வரை ரூ.9400 இலட்சம் தமிழ்நாடு அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2016–2017ஆம் ஆண்டிற்கான உள்கட்டமைப்பு திட்டங்கள் விவரம் :-**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்,** மணியங்குறிச்சியில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் பகுதியில் சூரிய சக்தி மின்விளக்குகள் அமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்தல் | 44.43 |
| 2 | **தேனி மாவட்டம்,** குச்சனூர் பேரூராட்சி பகுதியிலுள்ள | 118.00 |

| | | |
|---|---|---|
| | அருள்மிகு ஸ்ரீ சுயம்பு சனீஸ்வரர் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | |
| 3 | **இராமநாதபுரம் மாவட்டம்,** சேதுக்கரையில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவில் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 63.31 |
| 4 | **நாமக்கல் மாவட்டம்,** திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் மலைக்கோவில் கிரிவல பாதை மற்றும் முக்கிய சாலைகளில் மின்விளக்குகள் அமைத்தல் | 183.51 |
| 5 | **கிருஷ்ணகிரி மாவட்டம்,** ஒசூர் அருகே உள்ள தேவர்பெட்டா மலைக் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 23.85 |
| 6 | **திருநெல்வேலி மாவட்டத்தில்** உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் | 16.29 |
| 7 | **மதுரை மாவட்டம்,** குட்லாடம்பட்டி அருவிப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் | 2.81 |

| | | |
|---|---|---|
| 8 | **திண்டுக்கல் மாவட்டம்,** தாண்டிக்குடி பாலமுருகன் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் | 47.80 |
| | **மொத்தம்** | **500.00** |

**2016–17 ஆம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டு பணிகள் விவரம் :-**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **விருதுநகர் மாவட்டம்,** ஸ்ரீவில்லிபுத்தூர் சாப்டூர் காப்புக்காடுகள் அணில்கள் சரணாலயத்தில் அமைந்துள்ள அருள்மிகு சந்தான மகாலிங்கசுவாமி மற்றும் சுந்தர மகாலிங்கசுவாமி கோவில் பகுதிகளில் வழித்தட வசதிகள் ஏற்படுத்துதல் | 100.00 |
| 2 | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்,** மணப்பாறை வட்டம், வீரப்பூரில் உள்ள அருள்மிகு கன்னிமாரம்மன் திருக்கோவிலுக்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் | 100.00 |
| 3 | **காஞ்சிபுரம் மாவட்டம்,** மாமல்லபுரம் அருகே நெம்மேலி | 36.42 |

| | | |
|---|---|---|
| | ஊராட்சியிலுள்ள கிருஷ்ணன்கரணை பூஞ்சேரிபேட்டையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மேம்பாடு (கிழக்கு கடற்கரை சாலையிலிருந்து சமணர் கோவில் வரை) | |
| 4 | **மதுரை மாவட்டம்,** மேலவளவு ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஸ்ரீசோமகிரி கருப்பசுவாமி திருக்கோவிலுக்கு செல்லும் சாலையை மேம்படுத்துதல் | 170.00 |
| 5 | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்,** ஸ்ரீரங்கம் வட்டம், மேலூர் கிராமத்தில் உள்ள வண்ணத்துப்பூச்சி பூங்காவிற்கு செல்லும் அணுகுசாலையை மேம்படுத்துதல் | 193.58 |
| | **மொத்தம்** | **600.00** |

## (II) இந்திய அரசு நிதியுதவித் திட்டங்கள்

இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்குதல் திட்டத்தின் **(பிரசாத் திட்டம்)** கீழ், காஞ்சிபுரம் மேம்பாட்டிற்காக

ரூ.**1,647.67** இலட்சமும் மற்றும் வேளாங்கண்ணி மேம்பாட்டிற்காக ரூ.**560.08** இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, முதல் தவணைத் தொகை முறையே (20 விழுக்காடு) ரூ.**329.53** இலட்சம் மற்றும் ரூ.**112.01** இலட்சம் பெறப்பட்டுள்ளது.

இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் **'சுதேஷ் தர்ஷன்'** திட்டத்தின் கீழ் கடற்கரைப் பகுதிகள் சுற்றுலாச் சுற்று மேம்பாட்டிற்காக ரூ.**9,991.84** இலட்சம் ஒப்பளித்து, முதல் தவணையாக (20 விழுக்காடு) ரூ.**1,998.36** இலட்சம் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், சென்னை–மெரினா மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மாமல்லபுரம் கடற்கரை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரம் கடற்கரை, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு கடற்கரை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கன்னியாகுமரி மற்றும் தெக்குறிச்சி கடற்கரை மற்றும் மணக்குடி கழிமுகப்பகுதி ஆகிய பகுதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

## ஆசிய வளர்ச்சி வங்கி – IDIPT திட்டம்

## (சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம்)

தமிழ்நாட்டில் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டத்திற்காக (IDIPT) ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் இரண்டு தொகுதிகளாக தொகுதி –2 மற்றும் தொகுதி–4 என செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் **தொகுதி–2ல்** பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.**66** கோடியில் **19** துணைத்திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் **12** துணைத் திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் **30.09.2017–**க்குள் முடிவடையும்.

**தொகுதி–4ல்** ரூ.403 கோடிக்கான துணைத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களில் செயல்படுத்தப்படவுள்ளன. ஆரம்பகட்ட பணிகளான, கருத்துக்குறிப்பு, துணைத்திட்ட விளக்க அறிக்கை, விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் ஆவணம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

நமது மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத் தலங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் நோக்கத்துடன், **30.06.1971** அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் கீழ் **53** தங்கும் விடுதிகளும், **9** சொகுசு பேருந்துகளும் உள்ளன. இக்கழகம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற மலைவாழ் சுற்றுலாத் தலங்களில், குறைந்த செலவில் சுற்றுலா மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இளைஞர் தங்கும் விடுதிகளையும் நிறுவியுள்ளது. சில ஓட்டல்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. மற்றவை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

## ஓட்டல்கள் பிரிவு

வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் தரமணி மற்றும் திருச்சிராப்பள்ளியில் துவாக்குடி ஆகிய இடங்களிலுள்ள இரண்டு உணவக மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் நட்சத்திர ஓட்டல்கள் ஆகியவற்றின் வாயிலாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களின் மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

## படகு குழாம்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முட்டுக்காடு, முதலியார்குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம் மற்றும் பைக்காரா ஆகிய இடங்களில் படகு குழாம்களை இயக்கி வருகிறது.

## படகு குழாம், முட்டுக்காடு

சென்னையில் கிழக்கு கடற்கரை சாலையில் முட்டுக்காடு படகு குழாம் அமைந்துள்ளது. முட்டுக்காடு படகு குழாமில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உணவகம் இயங்குகிறது. இங்கு இயந்திர படகு மற்றும் துடுப்பு படகு வசதிகள் உள்ளன.

வார இறுதி நாட்களில் இந்த படகு குழாமில் சுமார் **4,000**–க்கும் கூடுதலாக சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

## படகு குழாம், முதலியார்குப்பம்

நீர் விளையாட்டு வசதிகள் கொண்ட முதலியார்குப்பம் படகு குழாம் சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரை சாலையில் **92** கி.மீ. தொலைவிலும் மற்றும் மாமல்லபுரத்தின் தெற்கே **36** கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இந்தப் படகு குழாமை "**மழைத்துளி படகு குழாம்**" என்றும் அழைப்பர்.

ஒடியூர் ஏரியில் முகத்துவார நீர்நிலையை ஒட்டி அமைந்துள்ள இந்த படகு குழாமை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேம்படுத்தியுள்ளது.

இங்கு துடுப்புப் படகு, மிதி படகு, ஓரிருக்கை படகு, வாழைப்பழ அமைப்பு படகு, வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் விசைப் படகு வசதிகள் உள்ளன.

ஒடியூர் ஏரியை ஒட்டியுள்ள கடற்கரைத் தீவிற்கு இந்த படகு குழாம் மூலம் படகு பயணங்கள் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் இந்த தீவில் சில மணி நேரம் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்கள் வசதிக்காக தங்கும் கூடாரங்கள் உள்ளன. அங்கு ஒரு சிற்றுண்டி உணவகம் உள்ளது. அங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி கிடைக்கும்.

**படகு குழாம், ஊட்டி**

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள ஏரியில் சுமார் 85 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் படகு குழாம் உள்ளது. இங்கு படகுசவாரிதான் பிரதான சுற்றுலா ஈர்ப்பு மையமாக உள்ளது. இந்த படகு குழாமில் கால்மிதி படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப் படகு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள அழகான பூங்காவும் சிறுரக தொடர் வண்டி வசதியும் மேலும் மெருகூட்டுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக உணவகமும் செயல்படுகிறது.

**படகு குழாம், பைக்காரா**

ஊட்டி – மைசூர் சாலையில் உதகமண்டலத்தில் இருந்து 21 கி.மீ. தொலைவில் பைக்காரா ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியை ஒட்டி அமைந்துள்ள பைக்காரா நீர்த்தேக்கம் ஒரு கண்கவர் பொறியியல் விந்தையாகும். முக்குருத்தி மலை முகட்டிலிருந்து பைக்காரா ஆறு உற்பத்தியாகிறது. சுற்றுலாவை மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளுக்கு இந்த

ஏரி மகிழ்வைத் தரும் ரசிக்கத்தக்க சுற்றுலா மையமாக அமைந்துள்ளது.

பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள இந்த படகு குழாம் சுற்றுலா மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளை மிகவும் கவரும் அம்சமாக அமைந்துள்ளது. இங்கு இயந்திர படகு, அதிவேகப் படகு மற்றும் உணவகம் அனைத்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயக்கப்படுகிறது.

## படகு குழாம், கொடைக்கானல்

கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் பரந்து விரிந்துள்ள 59 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட ஏரியில் இப்படகு குழாம் அமைந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கு இரண்டு படகு குழாம்களை நடத்துகிறது. இங்கு துடுப்புப் படகு, மிதி படகு மற்றும் சிக்காரா படகு வசதிகள் உள்ளன.

## படகு குழாம், ஏற்காடு

சுற்றுலா பயணிகளை கவரும் சுற்றுலா மையமாக, ஏற்காடு நகரப் பேருந்து நிலையம் அருகில் 28.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்காடு ஏரி அமைந்துள்ளது. இது சேலம் இரயில்

சந்திப்பிலிருந்து 38 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு மிதி படகு, துடுப்புப் படகு மற்றும் விசைப் படகு வசதிகள் உள்ளன.

## படகு குழாம், பிச்சாவரம்

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகில் பிச்சாவரம் படகு குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பகுதி கடலிலிருந்து மணல் மேடுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. சுர புன்னைக்காடுகள் கொண்ட இவ்விடத்தில், என்றும் வற்றாமல் குறைந்த அளவு நீர் இருக்கும். இங்கு துடுப்புப் படகு மற்றும் இயந்திரப் படகு வசதிகள் உள்ளன.

## படகு குழாம், குற்றாலம்

மக்கள் மகிழும் வகையில் பலரால் பேசப்படும் இடமாகத் திகழும் குற்றாலம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ளது. குற்றாலப் படகு குழாமில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவங்களின் போது, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக படகு சவாரி வசதிகள் செய்யப்படுகின்றன. இங்கு துடுப்புப் படகு, மிதி படகு மற்றும் கயாக் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்கு முதன்மை முக்கியத்துவம் அளிப்பதற்காக, அனைத்து படகு குழாம்களிலும் படகு சவாரியின் போது சுற்றுலாப் பயணிகள் உயிர்க்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப்பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 9 சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயனடைவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 40க்கும் மேற்பட்ட சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கிறது. இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல விரும்புகிற சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அவர்களுக்கேற்ற ஆயத்த சுற்றுலாக்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயண சலுகைக்கான சுற்றுலாக்களுக்கும் ஏற்பாடு செய்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2015 ஜூன் திங்கள் முதல் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து

தினசரி 150 அனுமதிச் சீட்டுக்கள் பெற்று வாரத்தின் ஏழு நாட்களுக்கும் விரைவு தரிசன வசதிகளை செய்து தருகிறது.

## பொருட்காட்சிப் பிரிவு

சென்னை தீவுத்திடலில் 13.01.2017 அன்று 43வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி தொடங்கப்பட்டது. ‘‘அனைவருக்கும் சுற்றுலா – உலகளாவிய சுற்றுலா அணுகுமுறைக்கு வழிவகுத்தல்’’ என்ற மையக் கருத்தைக் கொண்டு இந்த ஆண்டு கண்காட்சி அரங்கு அமைக்கப்பட்டது.

அனைத்து அரசுத் துறைகளின் சார்பில் மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப்படுத்தும் வகையில் கண்கவர் செய்முறை மாதிரிகளைக் கொண்டு பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டன.

இந்த ஆண்டு பொருட்காட்சியில் புதிய வரவாக சென்னை மண்டலத்திலுள்ள சட்டப்பணிகள் ஆணைக்குழு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்காக இலவச சட்ட ஆலோசனைகளை வழங்க பிரதான அரங்கம் ஒன்றை அமைத்தது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் (விற்பனை) முயற்சிகள்**

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை இணையதளம் மூலம் ஆன்லைன் முறையில் பதிவு செய்வதற்காக, **makemytrip.com, yatra.com and travelguru.com** நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் ‘‘விடுமுறை இல்ல’’ வசதிகள் மூலம் தங்குவதற்கு, ஏர் இந்தியா நிறுவனத்துடன் கடன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏப்ரல் திங்கள் 2016 முதல் மார்ச் திங்கள் 2017 வரை ரூ.15.86 இலட்சம் அளவில் வருவாய் ஈட்டியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் ‘‘விடுமுறை இல்ல’’ வசதிகள் மூலம் தங்குவதற்கு, கீழ்க்கண்ட நிறுவனங்களுடன் ‘‘முன் வைப்புத் தொகை மூலம் அறை ஒதுக்கும்

திட்டத்தின்'' கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வைப்புத் தொகையாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.147.74 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

**விடுமுறைக் கால முன் வைப்புத் தொகை திட்டம்**

மதுரையில் உள்ள மத்திய கலால் வரி மற்றும் சுங்கத் துறையினர் ரூ.30 இலட்சத்தை இத்திட்டத்தின் கீழ் 01.06.2016 முதல் 30.05.2019 வரையிலான 3–ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக வழங்கியுள்ளது. இதற்காக கொடைக்கானல் 'ஓட்டல் தமிழ்நாடு' விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நுங்கம்பாக்கத்தில் உள்ள தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் ரூ.68 இலட்சத்தை (ஊட்டி, ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு ரூ.33 இலட்சமும், கன்னியாகுமரி, ஓட்டல் தமிழ்நாடு விடுதிக்கு ரூ.35 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.68 இலட்சத்தை) 01.05.2014 முதல் 30.04.2017 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக கொடுத்துள்ளது. தற்போது அதன் கால அளவு 30.04.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தலா இரு படுக்கை வசதிகொண்ட இரு அறைகள் ஊட்டியில் உள்ள ஓட்டல்

தமிழ்நாடு தங்கும் விடுதியிலும் மற்றும் கன்னியாகுமரி ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியிலும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மதுரையில் உள்ள தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் மூலம் ரூ.24 இலட்சம் 03.07.2014 முதல் 02.07.2017 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு முன்வைப்புத் தொகையாக பெறப்பட்டுள்ளது. அதன்படி அத்துறையின் பயன்பாட்டிற்காக கொடைக்கானலில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியில் இரு படுக்கை வசதி கொண்ட இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவிலில் உள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மூலம் ரூ.18.95 இலட்சம் முன்வைப்புத் தொகையாக பெறப்பட்டு கன்னியாகுமரியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதியில் அவர்கள் பயன்பாட்டிற்காக மூன்று அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் பயன்பாட்டிற்கு ஓராண்டிற்காக 15.02.2016 முதல் 14.02.2017 வரை முன்வைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.6.79 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அது தற்போது 30.06.2017 வரை

நீட்டிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள கேப் ஓட்டலில் மூன்று அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதைப்போன்றே மிகவும் பிரசித்திப்பெற்ற பல குழுமங்கள் தங்களின் ஆலோசனைக் கூட்டங்கள்/ பணிமனைத் திட்டங்களை மாமல்லபுரத்தில் உள்ள **கடற்கரை ஓய்வு வளாக** மையத்தில் நடத்திட ஆர்வம் கூட்டும் முயற்சிகள் பல செயல்படுத்தப்படுகின்றன.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்–ஆளுமை முயற்சிகள்

**2004** ஜுலை மாதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இணையதளம் மூலம் முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்திய வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நாட்டிலேயே முதலாவது மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற தனிச்சிறப்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலாக்கள் மற்றும் ஓட்டல்களை இணைய தளத்தின் மூலம் முன்பதிவு செய்வதற்கு உரிய

வசதிகள் ஏற்படுத்தியதன் மூலம், வருவாய் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பதற்கு, இம்முயற்சி பெரிதும் உதவியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கு, அலைபேசி மூலம் முன்பதிவு செய்யும் திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், உலக சுற்றுலா தினமான 27.09.2012 அன்று தொடங்கி வைத்தார்கள். இது, அனைத்து அலைபேசி இயக்குவோர் தொடர்புகள் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கு முன்பதிவு செய்ய பெரிதும் உதவுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களை, இணையதள வழியில் முன்பதிவு செய்யும் வசதி, இதற்கு முன்னர் 17 ஓட்டல்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது. இந்த வசதி 2016–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து 22 ஓட்டல்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2016–17 ஆம் ஆண்டில் இணைய வழி பதிவு வாயிலாக ஈட்டிய வருவாய் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

ரூ.11.08 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் இந்த வகையிலான வருவாய் ரூ.10.07 கோடியாக மட்டுமே இருந்தது.

சுற்றுலா பயணிகளின் வசதிக்காக தமிழ்நாட்டில் உலக பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்கள் (UNESCO–World Heritage Sites) பற்றிய தொகுப்பு அடங்கிய விவரங்கள் அறிய கைப்பேசியின் மூலம் ஒலி செயலி (Tourist Audio-Guide Mobile app-PINAKIN) மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் 13.01.2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2016–17ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட வளர்ச்சி மற்றும் கட்டுமானப் பணிகள்

1. ரூ.2.43 கோடி செலவில், மாமல்லபுரம், கடற்கரை ஓய்வு வளாகத்தை தரம் உயர்த்துகிற பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. ரூ.3.25 கோடி மற்றும் ரூ.1.45 கோடி செலவில் முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பத்தில் படகு குழாம்களின் தரத்தை உயர்த்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. இராமேஸ்வரத்தில் ரூ.2 கோடி செலவில் 21 அறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு, 18.07.2016 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

4. திருக்கடையூரில் ரூ.1.20 கோடி செலவில் புதிய சுற்றுலா தங்கும் விடுதி கட்டப்பட்டு, 18.07.2016 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.


**முடிவுரை**

பல்வேறு சுற்றுலா கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தியும், சுற்றுலா நட்புணர்வு சேவைகளை செம்மைப்படுத்தியும், தமிழ்நாட்டை தேசிய மற்றும் பன்னாட்டு சுற்றுலாத் தலமாக உயர்த்தும் அரசின் நோக்கத்தை செயலாக்க, மாநில சுற்றுலாத்துறை முனைப்புடன் செயல்படும்.

**வெல்லமண்டி ந. நடராஜன்**
**சுற்றுலாத்துறை அமைச்சர்**


## அட்டவணை – 1

### சுற்றுலாத்துறை அமைப்பு விளக்கப்படம்



## அட்டவணை–2

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்



# அட்டவணை–3

## சுற்றுலா அலுவலகங்கள்

## தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

| | | |
|---|---|---|
| 1. அரியலூர் | 12. மதுரை | 23. திருவண்ணாமலை |
| 2. சென்னை | 13. மாமல்லபுரம் | 24. திருவள்ளூர் |
| 3. கோயம்புத்தூர் | 14. நாமக்கல் | 25. திருவாரூர் |
| 4. சிதம்பரம் | 15. பூம்புகார் | 26. தேனி |
| 5. தர்மபுரி | 16. புதுக்கோட்டை | 27. தூத்துக்குடி |
| 6. ஈரோடு | 17. பெரம்பலூர் | 28. திருப்பூர் |
| 7. காரைக்குடி | 18. இராமேஸ்வரம் | 29. உதகமண்டலம் |
| 8. கன்னியாகுமரி | 19. சேலம் | 30. வேலூர் |
| 9. கொடைக்கானல் | 20. திருச்சிராப்பள்ளி | 31. விருதுநகர் |
| 10. கிருஷ்ணகிரி | 21. திருநெல்வேலி | 32. விழுப்புரம் |
| 11. கரூர் | 22. தஞ்சாவூர் | |

## வெளிமாநிலங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புது தில்லி
2. ஆக்ரா
3. ஜெய்ப்பூர்
4. கொல்கத்தா
5. மும்பை
6. பனாஜி (கோவா)

# அட்டவணை - 4

## சுற்றுலா தகவல் மையங்கள்

### தமிழ்நாட்டில் அமைந்துள்ளவை

| **விமான நிலையத்தில் அமைந்துள்ளவை** | **இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை** |
|---|---|
| 1. சென்னை (பன்னாட்டு முனையம்)<br>2. சென்னை (உள்நாட்டு முனையம்)<br>3. கோயம்புத்தூர்<br>4. மதுரை<br>5. திருச்சிராப்பள்ளி | 1. சென்னை (எழும்பூர்)<br>2. கோயம்புத்தூர்<br>3. மதுரை<br>4. திருச்சிராப்பள்ளி<br>5. திருநெல்வேலி |
| **பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை** | **பிற இடங்களில் அமைந்துள்ளவை** |
| 1. சென்னை (கோயம்பேடு) | 1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்)<br>2. இராமேஸ்வரம் (கோவில் வளாகம்)<br>3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு)<br>4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்) |

| வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை |
| --- |
| 1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடகா)<br>2. ஐதராபாத் (தெலுங்கானா)<br>3. திருவனந்தபுரம் (கேரளா)<br>4. அகமதாபாத் (குஜராத்)<br>5. புவனேஸ்வர் (ஒடிசா) |